
இந்திரா: ஐயோ, ஒத்துக்குவே(ன்), ஒத்துக்குவே(ன்), ஒத்துக்குவே(ன்).

ஒத்துக்குவேன் - ஒத்துக்கொள்வேன்.

திருச்செல்வன்: போய் சேர்ற வரைக்கும் ஒரு வார்த்த பேசக்கூடாது. செய்றீங்களா?

சேர் - reach; போய்ச்சேர் - go and reach, reach our destination; வார்த்தை - word; பேசு - speak.

போய்ச் சேர்கிற வரைக்கும் ஒரு வார்த்தை பேசக்கூடாது. செய்கிறீர்களா? Until we reach, should not speak one word. Would you do it?

இந்திரா: ஏ… ஒரு…

Red Cross woman: திருச்செல்வன், கத படிச்சே(ன்). வேற பேரில எழுதியிருந்தது.

திருச்செல்வன், கதை படித்தேன். வேறு பெயரில் எழுதி இருந்தது. Thiruchelvan, I read the story. It was written in a different name.

If it is written under a different name, how does she know that he wrote it? He must have talked to her earlier to gather information for the story.

இந்திரா: எம் பேரக் கடன் வாங்கிட்டாருங்க.

கடன் - loan; கடன் வாங்கு - get a loan, borrow.

என் பெயரைக் கடன் வாங்கிவிட்டார். He has borrowed my name.

Here again we see the -ங்க suffix, because இந்திரா is talking to an elder. It is her style of speaking. We do not see it in other characters.

Red Cross woman: அப்பா எப்படிம்மா இருக்காரு?

அப்பா எப்படி அம்மா இருக்கிறார்? How is (your) father, dear?

இந்திரா: நல்லாருக்காரு.

நன்று - good, well.

நன்றாக இருக்கிறார். (He) is well.

Red Cross woman: கத ரொம்ப உருக்கமாருந்துது.
உருகு - melt; உருக்கம் - melting, moving.

கதை ரொம்ப உருக்கமாக இருந்தது. The story was very moving.

திருச்செல்வன்: கொழந்தயப் பாக்கலாமா?

குழந்தையைப் பார்க்கலாமா? Can (we) see the baby?

Red Cross woman: **சுகன்யா**!

சுகன்யா: **அம்மா**!

[Red Cross woman gestures to show the baby]

சுகன்யா: **வாங்க**.

இந்திரா: நல்லாருந்திச்சில்ல? நானும் அழுதுட்டே(ன்).

நன்றாக இருந்தது, இல்லை? நானும் அழுதுவிட்டேன். It was good, wasn't it? I too cried.

[இந்திரா and திரு look at the baby]

இந்திரா: ஓ… ஓ… என்னடி? பேரென்ன? என்ன பேரு? இவ்வளவு பெரிய எழுத்தாளருக்கு, பேர் வைக்கத் தெரியாதா? நான் பேரு வைக்கட்டுமா? ஆங், நான் பேர் வைக்கட்டுமா? அவளது அழுகை அமுதமாக ஒலித்தது. இந்தக் கொழந்தய தத்தெடுத்துக்கப் போறீங்களா?

எழுத்தாளர் - writer; பெயர் வை - name, christen.

ஓ… ஓ… என்ன டி? பெயர் என்ன? என்ன பெயர்? இவ்வளவு பெரிய எழுத்தாளருக்குப் பெயர் வைக்கத் தெரியாதா? நான் பெயர் வைக்கட்டுமா? ஆங், நான் பெயர் வைக்கட்டுமா? அவளது அழுகை அமுதமாக ஒலித்தது. இந்தக் குழந்தையைத் தத்து எடுத்துக்கொள்ளப் போகிறீர்களா? Oh… oh… what girl? What is the name? What name is it? Such a great writer does not know to name? Shall I name (you)? Her cry sounded sweet as அமுது (ambrosia). Are you going to adopt this baby?

[திருச்செல்வன் remains silent]

இந்திரா: இல்லையா? ம், அப்போ லட்சியம் எல்லாம் கதையெழுதறதோட சரியா? பாருங்க Sri Lanka பக்கம் கைகாமிக்கிறா. [Kisses the baby]. உங்க அம்மா அங்கதான் இருக்காங்களா? உன்ன

விட்டுட்டுப் போயிட்டாங்களா? உனக்கு யாருமேயில்லியா? எங்கம்மா கூட என்ன விட்டுட்டுப் போய்ட்டாங்க. இந்த எஞ்சினீயர் சார் ஒன்னப் பத்திக் கதையெழுதி சம்பாதிச்சிட்டிருக்காரா(ம்). கத மட்டும் எழுதினாப் போதுமா? கேளு!

லட்சியம் - principle; காமி - காண்பி, show; சம்பாதி - earn, make money.

இல்லையா? ம், அப்போது லட்சியம் எல்லாம் கதை எழுதுகிறதுடன் சரியா? பாருங்கள் Sri Lanka பக்கம் கை காண்பிக்கிறாள். உங்கள் அம்மா அங்கேதான் இருக்கிறார்களா? உன்னை விட்டுவிட்டுப் போய்விட்டார்களா? உனக்கு யாருமே இல்லையா? எங்க அம்மா கூட என்னை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். இந்த எஞ்சினியர் சார் உன்னைப் பற்றிக் கதை எழுதி சம்பாதித்துக் கொண்டிருக்கிறாராம். கதை மட்டும் எழுதினால் போதுமா? கேள். No? So, does principle end with writing story? Look she is pointing towards Sri Lanka. Is it where your mother is? Did she leave you and go? Is there no one for you? My mother too has left me and gone. This engineer sir is writing story about you and making money. Is it enough to write story? Ask (him).

She says சம்பாதித்துக் கொண்டிருக்கிறாராம் to add an indirection as opposed to சம்பாதித்துக் கொண்டிருக்கிறார். It is not that she is accusing him; the statement is true from a neutral point of view.

7.9 The adoption topic

[கமலி and இந்திரா are making preparations for a meal. திரு is reading]

கமலி: பைத்தியக்காரத் தனமாப் பேசாத! கலியாணத்துக்கு முன்னாடி யாராவது கொழந்தயத் தத்தெடுப்பாங்களா? நீ சொல்லு.

பைத்தியம் - crazy; பைத்தியக்காரன் - crazy one; பைத்தியக்காரத்தனம் - craziness. கல்யாணம் - marriage; முன்னாடி - முன்பு, before; யாராவது - anyone.

பைத்தியக்காரத்தனமாகப் பேசாதே! கல்யாணத்துக்கு முன்பு யாராவது குழந்தையைத் தத்தெடுப்பார்களா? நீ சொல். Don’t talk crazy! Would anyone adopt a baby before marriage? What do you say?

இந்திரா: நிச்சயமா மாட்டாங்க.

Certainly, (they) won’t.

திருச்செல்வன்: என்ன problem வரும்?

What problem will arise?

கமலி: தத்தெடுக்கணும், அப்பப்போ கழுவித் தொடைக்கணும், தினம் Johnson's baby powder-ஐப் போட்டு napkin மாத்தணும்ன்னு நெனச்சியன்னா, இதோ என் வயத்தில வளருது பாரு அத எடுத்துக்க. ஏதோ camp-ல கெடக்கிற, கருப்பா, அனாதையா! யார் பெத்த புள்ளயோ, என்ன வியாதியோ!

அப்பப்போ - அவ்வப்போது, அப்போது அப்போது, now and then, often; கழுவு - wash; துடை - wipe; தினம் - daily; napkin - diaper; மாற்று - change; மாத்தணும் - மாற்ற வேண்டும்; நினை - think நெனச்சியன்னா - நினைத்தாயானால்; வளர் - grow, develop; அனாதை - orphan; வியாதி - disease.

தத்தெடுக்க வேண்டும், அவ்வப்போது கழுவித் துடைக்க வேண்டும், தினம் Johnson's baby powder-ஐப் போட்டு napkin மாற்ற வேண்டும் என்று நினைத்தாயானால், இதோ என் வயிற்றில் வளர்கிறது பார், அதை எடுத்துக்கொள். ஏதோ camp-இல் கிடக்கிற, கருப்பாக, அனைதையாக! யார் பெற்ற பிள்ளையோ, என்ன வியாதியோ! If you think you want to adopt, wash and wipe often, apply Johnson's baby powder daily, change diaper, then here take the one growing in my belly. Some baby lying in a camp, black, orphan! Whoever gave birth and whatever disease!

இந்திரா: அதெல்லாம் check பண்ணிடுவாங்க.

They would check all that.

கமலி: நீ சும்மாரு. இதோ பாரு, இதெல்லாம் கதயெழுதறதுக்குதான் லாயக்கு. இந்த மாதிரி பைத்தியக்காரத்தனமான adoption topic-ஐத் திருப்பி எடுத்த, நான் மெட்ராசுல என் புருஷன் வீட்டுக்குக் கௌம்பிப் போயிடுவேன்.

லாயக்கு - suitability; கிளம்பு - start, depart.

நீ சும்மா இரு. இதோ பார், இதெல்லாம் கதை எழுதுகிறதற்குத்தான் லாயக்கு. இந்த மாதிரி பைத்தியக்காரத்தனமான adoption topic-ஐத் திருப்பி எடுத்தாய், நான் மெட்ராஸில் என் புருஷன் வீட்டுக்குக் கிளம்பிப் போய்விடுவேன். You keep quiet.

Look here, all this is only suitable to write story. You take up the crazy adoption topic like this, I will depart to my husband's home at Madras.

திருச்செல்வன்: சரி, இந்த topic எடுக்க மாட்டேன். ஒரே ஒரு கையெழுத்து மட்டும் Red Cross-ல வந்து போட்டுட்டுப் போயிடு.

கையெழுத்து - signature; போட்டுட்டுப் போயிடு - போட்டுவிட்டுப் போய்விடு.

Ok, I won't take up this topic. Just come to the Red Cross and put one signature.

கமலி: டேய், ஒனக்கு என்ன கிறுக்குப் புடிச்சிருக்கா? இம்புட்டு நேரம் படிச்சிப் படிச்சிச் சொன்னது புரியல? நான் செத்தாலும் இதுக்கு ஒத்துக்க மாட்டேன். புரிஞ்சிதா?

கிறுக்கு - madness; இம்புட்டு - இவ்வளவு; படிச்சிப் படிச்சி - படித்துப் படித்து, repeatedly as if reading from the same passage; புரியல - புரியவில்லை; சா - die; நான் செத்தாலும் - even if I die.

டேய், உனக்கு என்ன கிறுக்குப் பிடித்திருக்கிறதா? இவ்வளவு நேரம் படித்துப் படித்துச் சொன்னது புரியவில்லை? நான் செத்தாலும் இதற்கு ஒத்துக்கொள்ள மாட்டேன். புரிந்ததா? Hey, have you gone mad? You do not understand what I have been reciting till now? I won't agree to this even if I die. Understand?

7.10 Indira's engagement

[திரு does not find his sister at home and checks next door]

திருச்செல்வன்: அக்கா!

[கணேசன் is talking with guests and turns to find திருச்செல்வன்]

கணேசன்: வாப்பா திரு! நல்ல நேரத்துக்குத்தான் வந்திருக்கிறே. சாமித்துர, அந்த நாக்காலிய எடுத்துப் போடு. இவரு திருச்செல்வம். நம்ம பின்னாடி வீட்டிலதா குடியிருக்காரு. பக்கத்தூர்ல ஒரு பெரிய factory கட்டிறாங்கல்ல? அதுக்கு தம்பிதான் எஞ்சினியரு. அது மட்டுமில்ல. கத கூட எழுதுவாரு. இந்த கொட, கோபுரம், அப்புறம் வந்து சொம்பு இப்பிடியெல்லாம்! இவங்க நம்ம இந்திராவ...

நாற்காலி - thing with four legs, chair; பின்னாடி - பின்பக்கம், behind; குடியிரு - reside; அப்புறம் and வந்து are filler words uttered when someone is thinking; குடை - umbrella, கோபுரம் - tower; சொம்பு - a bowl-like water container.

வா அப்பா திரு! நல்ல நேரத்துக்குத்தான் வந்திருக்கிறாய். சாமித்துரை, அந்த நாற்காலியை எடுத்துப் போடு. இவர் திருச்செல்வம். நம் பின்பக்க வீட்டில்தான் குடியிருக்கிறார். பக்கத்து ஊரில் ஒரு பெரிய factory கட்டுகிறார்கள், இல்லை? அதற்குத் தம்பிதான் எஞ்சினியர். அது மட்டும் இல்லை. கதை கூட எழுதுவார். இந்த குடை, கோபுரம், சொம்பு இப்படி எல்லாம்! இவர்கள் நம் இந்திராவை ... Welcome Thiru! You have come at the right time; Samithurai, bring that chair. He is Thiruchelvam. He is residing at the house behind us. They are building a big factory in the next town, aren't they? He is the engineer for that. Not only that. He also writes stories. Umbrella, tower, jug and such! They … our Indira.

அப்பா literally meaning 'father' and தம்பி literally meaning 'younger brother' are ways of referring to someone affectionately. குடை, கோபுரம், and சொம்பு are the titles of Thiru's stories.

திருச்செல்வன்: ஆ, தெரியுது. பாத்தாலே தெரியுது.

பார்த்தாலே தெரிகிறது - it is visible if I just see it; it is obvious, no need of explanation.

கணேசன்: வீட்டுச்சாவி … (inaudible)

House key.

கமலி: காப்பி மட்டும் போட்டுக்க. நான் இங்கேருந்து tiffin கொண்டாரேன்.

காப்பி போடு - make coffee.

காப்பி மட்டும் போட்டுக்கொள். நான் இங்கிருந்து tiffin கொண்டுவருகிறேன். Just make coffee, I will bring tiffin from here.

கணேசன்: என்ன பேசிக்கிட்டேருக்கிய! சாப்பிடுங்க தம்பி. சங்கோஜப் படாதீங்க. சாப்பிடுங்க.

சங்கோஜம் - shyness.

என்ன பேசிக்கொண்டே இருக்கிறீர்கள்! சாப்பிடுங்கள் தம்பி. சங்கோஜப் படாதீர்கள். சாப்பிடுங்கள். What, you keep talking! Eat. Don't be shy. Eat.

This is somewhat of a parody on arranged marriages. The bride and groom get a few minutes to see each other and decide the rest of their lives. And the father of the bride is demonstrating his hospitality by focusing on feeding the groom.

[The groom gets up and follows Thiru]

கணேசன்: என்ன, தம்பி திடீர்னு? யாரும் கூடப் போணுமா?

திடீர் - sudden.

என்ன, தம்பி திடீர் என்று? யாரும் கூடப் போக வேண்டுமா? Why, suddenly? Should someone go with him?

The groom: சார், ஒரு நிமிஷம், ஹலோ! Match box இருக்கா? உள்ள தாசில்தார் இருக்கார்ல்ல, smoke பண்ண முடியல.

Sir, one minute, hello! Have matches? Tahsildar is inside, isn't he; I couldn't smoke.

The groom: தீப்பெட்டி?

திருச்செல்வன்: இல்ல.

The groom: Books படிக்கல்லாம் எனக்கு time இல்ல. கன்னித்தீவு படிப்பேன். ராசிபலன், கிசுகிசுல்லாம் படிப்பேன்.

கன்னித்தீவு - a children's comic; ராசிபலன் - horoscope hints; கிசுகிசு - gossip.

திருச்செல்வன்: உங்க இலக்கிய ரசனை நல்லாவே இருக்கு.

இலக்கியம் - literature; இலக்கிய ரசனை - taste in literature.

The groom: சார், சார், சார், ஒரு நிமிஷம். இந்த இந்திரா எப்படி? இல்லே, பின்னாடி வீட்டில இருக்கீங்க. உங்களுக்குத் தெரியாததா? அரசல் புரசலா, அப்பிடி இப்பிடி…

அரசல் புரசலாக - vaguely, informally, unofficially.

Sir, sir, sir, one minute. How is this Indira? I mean, you are in the house behind. Wouldn't be known to you? Vaguely, this way and that way …

திருச்செல்வன்: உங்க பேர் என்ன சொன்னீங்க?

What did you say your name is?

The groom: தனராஜ்

திருச்செல்வன்: தனராஜ், மரியாதயாப் போங்க. மரியாதயாப் பேசுங்க, மரியாதயாப் போங்க. நான் கத மட்டும் இல்ல. ஒதயும் குடுப்பேன்.

மரியாதை - respect; உதை - hit, kick.

தனராஜ், மரியாதையாகப் போங்கள். மரியாதையாகப் பேசுங்கள், மரியாதையாகப் போங்கள். நான் கதை மட்டும் இல்லை, உதையும் கொடுப்பேன். Danaraj, go with respect. Speak respectfully and go respectfully. Not only story, I also give kick.

7.11 Joking about suicide and eloping

திருச்செல்வன் is fixing his bike.

கமலி: டேய் முடிச்சிட்டியா? காப்பி ஆறிடப் போவுது.

டேய், முடித்துவிட்டாயா? காப்பி ஆறிவிடப் போகிறது. Hey, did you finish? Coffee is going to get cold.

திருச்செல்வன்: ஒரு நிமிஷம், ஒரு நிமிஷங்க்கா.

[இந்திரா comes]

கமலி: வாம்மா, புதுப்பொண்ணு! ரொம்ப பெரிய எடமாண்டா. மாப்பிள்ள சலவக்கல்லால எழச்சி வீடு கட்டிக் குடுப்பானாம்.

பெண் - woman, bride (in context) புதுப் பெண் - new bride; பெரிய இடம் - great place; மாப்பிள்ளை - groom; சலவைக் கல் - washed stone, polished stone, marble; இழை - set, layer.

வா அம்மா, புதுப் பெண்! ரொம்பப் பெரிய இடமாம் டா. மாப்பிள்ளை சலவைக் கல்லாலே இழைத்து வீடு கட்டிக் கொடுப்பானாம். Welcome new bride! Very desirable proposal I hear. The groom would build a house layered with marble.

Outside voice (mailman): **அம்மா**, letter!

கமலி: நெசமாச் சொல்லப்போனா எனக்குக் கொஞ்சம் பயமாவேருந்திச்சி, எங்கே எந்தம்பிய மயக்கிடப் போறியோன்னு.

நிஜமாகச் சொல்லப் போனால் - if going to say the truth, really speaking; மயக்கு - seduce; பயம் - fear.

நிஜமாகச் சொல்லப்போனால், எனக்குக் கொஞ்சம் பயமாகவே இருந்தது, எங்கே என் தம்பியை மயக்கிவிடப் போகிறாயோ என்று. Really speaking, I was a little scared that perhaps you might seduce my brother.

இந்திரா: உங்க தம்பி அப்பிடி ஒண்ணும் மயங்குற ஆசாமி இல்ல.

ஆசாமி - person, individual.

உங்கள் தம்பி அப்படி ஒன்றும் மயங்குகிற ஆசாமி இல்லை. Your brother is not one amenable to be seduced.

[கமலி goes away to meet the mailman]

இந்திரா: நான் தற்கொல செஞ்சிக்கப் போறேன்.

தற்கொலை - suicide; தற்கொலை செய் - do suicide, commit suicide.

நான் தற்கொலை செய்துகொள்ளப் போகிறேன். I am going to commit suicide.

திருச்செல்வன்: அப்படியா? கண்டிப்பா அதப் பத்திக் கதயெழுதலாம். ஆமா, எப்படித் தற்கொல செஞ்சிக்கப் போறீங்க? தண்ணில முழுகலாம், இல்ல (a brand of rat poison) சாப்பிடலாம். Cheap and best தூக்குதான். ஒரு பொடவ, ஒரு வளையம்! ஆனா ஒங்க வீட்டு fan-ல தொங்காதீங்க. ரொம்பப் பழைய fan.

மூழ்கு - immerse oneself; தூக்கு - hanging; புடவை - sari; வளையம் - ring; பழைய - old.

அப்படியா? கண்டிப்பாக அதைப் பற்றிக் கதை எழுதலாம். ஆமாம், எப்படித் தற்கொலை செய்துகொள்ளப் போகிறீர்கள்? தண்ணீரில் மூழ்கலாம், இல்லை (a brand of rat poison) சாப்பிடலாம். Cheap and best தூக்குதான். ஒரு புடவை, ஒரு வளையம்! ஆனால் உங்கள் வீட்டு fan-இல் தொங்காதீர்கள். ரொம்பப் பழைய fan. Really? Certainly I can write a story about it. Ok, how are you going to commit suicide? You can drown in water, or eat rat poison. Cheap and best is hanging. A sari and a ring! But don't hang on the fan in your house. Very old fan.

இந்திரா: இந்தக் கருமாந்திந்தான் பேசப் போறீங்களா? வேற ஏதும் …

கருமாந்திரம் - கருமாதி, funeral rite, an expression of disgust.

இந்தக் கருமாதிதான் பேசப் போகிறீர்களா? வேறு ஏதும் ... Are you only going to talk about this rubbish? Any other ….

[கமலி comes back with the mail. இந்திரா stops abruptly and leaves]

கமலி: எனக்கு என்னமோ அந்தப் பொண்ணு ஒன்ன love பண்றான்னு தோணுது. நீ அவள love பண்றியாடா?

எனக்கு என்னவோ அந்தப் பெண் உன்னை love பண்ணுகிறாள் என்று தோன்றுகிறது. நீ அவளை love பண்ணுகிறாயா டா? It seems to me that that girl loves you. Do you lover her?

[திரு silently looks up]

கமலி: ஏதாவது பண்ண வேண்டியதுதான?

ஏதாவது - anything, something; பண்ணு - do.

Why not do something?

திருச்செல்வன்: என்ன செய்யச் சொல்றே?

என்ன செய்யச் சொல்கிறாய்? What do you say I do?

கமலி: தூக்கிட்டு ஓடிப்போ!

தூக்கு - lift, carry; ஓடிப்போ and தூக்கிக்கொண்டு போ are expressions used for eloping or abducting to marry.

திருச்செல்வன்: அந்தப் பொண்ணு மனசில தைரியம் இருந்தா, விருப்பம் இருந்தா, மனசில பலம் இருந்தா, அவ அந்த granite ஆள வேண்டான்னு சொல்லுவா.

தைரியம் - courage; விருப்பம் - liking; பலம் - strength.

அந்தப் பெண் மனத்தில் தைரியம் இருந்தால், விருப்பம் இருந்தால், மனத்தில் பலம் இருந்தால், அவள் அந்த granite ஆளை வேண்டாம் என்று சொல்வாள். If there is courage in that girl's mind, if there is desire, if there is strength in the mind, she would say no to the granite man.

கமலி: நீ அவளத் தடுப்பேன்னு நெனச்சிருப்பாளோ என்னவோ!

தடு - prevent, block.

நீ அவளைத் தடுப்பாய் என்று நினைத்திருப்பாளோ என்னவோ! She might have thought you would block her or something.

திருச்செல்வன்: (handing a letter) இது ஒனக்காக, ஒம் புருஷன் அனுப்பிச்சிருக்காரு.

இது உனக்காக. உன் புருஷன் அனுப்பி வைத்திருக்கிறார். This is for you. Your husband has sent it.

கமலி: ஏ, அப்பாகிட்டேருந்து லெட்டர், லெட்டர், அப்பா, லெட்டர்.

Hurrah! A letter from daddy!

7.12 Adoption attempt

திருச்செல்வன்: இவங்க எங்க அக்கா Mrs. கமலா குமாரி. இவர ஒங்களுக்கு நல்லாத் தெரியும், தாசில்தார் கணேசன். இவங்க ரெண்டுபேரும் எங்கூடக் கையெழுத்துப் போடுவாங்க. நான் அமுதாவத் தத்தெடுத்துக்க விரும்பறேன்.

இவர்கள் எங்கள் அக்கா Mrs. கமலா குமாரி. இவரை உங்களுக்கு நன்றாகத் தெரியும், தாசில்தார் கணேசன். இவர்கள் இரண்டு பேரும் என் கூடக் கையெழுத்துப் போடுவார்கள். நான் அமுதாவைத் தத்தெடுத்துக்கொள்ள விரும்புகிறேன். This is

my sister Mrs. Kamala Kumari. You know him very well, Tahsildar Ganesan. These two will sign with me. I wish to adopt Amudha.

கணேசன்: ஏய், இதுக்குத்தான் என்ன இங்கே கூட்டியாந்தியா? ஹா, ஹா, பெரிய ஆளுய்யா நீ. பேச்சு, எழுத்துன்னு நிக்காம, செயல்லயும் காட்டுறேன்னு வந்துருக்க பாரு, சபாஷ்! ஆனா அது நடமுறைக்குச் சரிப்படுமா?

ஆள் - man; ஐயா - sir, பேச்சு - speech; எழுத்து - writing; செயல் - action; சபாஷ் - bravo, commendable; நடைமுறை - practice; சரிப்படு - be suitable.

ஏய், இதற்குத்தான் என்னை இங்கே கூட்டி வந்தாயா? ஹா, ஹா, பெரிய ஆள் ஐயா நீ. பேச்சு, எழுத்து என்று நிற்காமல், செயலிலும் காட்டுகிறேன் என்று வந்திருக்கிறாய் பார், சபாஷ்! ஆனால், அது நடைமுறைக்குச் சரிப்படுமா? Hey, is this what you brought me here for? Ha, ha, you are great man. Without stopping at speech and writing, you have come to show in action too. Bravo! But will this be practically suitable?

Just like அம்மா, அப்பா, one can address a younger man ஐயா (sir) affectionately.

கமலி: சொல்லுங்க சார், நல்லாச் சொல்லுங்க. அப்படியாவது ஒறைக்கட்டும்.

உறை - sink in.

சொல்லுங்கள், sir, நன்றாகச் சொல்லுங்கள். அப்படியாவது உறைக்கட்டும். Tell (him) sir, tell him well. Let it sink in at least that way.

திருச்செல்வன்: கணேசன், நா(ன்) ஒங்ககிட்ட அறிவுரை கேட்டேனா? Adoption form-ல கையெழுத்துப் போடுங்க, போதும்.

உங்ககிட்ட - உங்களிடம்; அறிவுரை - advice.

கணேசன், நான் உங்களிடம் அறிவுரை கேட்டேனா? Adoption form-இல் கையெழுத்துப் போடுங்கள், போதும். Ganesan, did I ask you for advice? Sign on the adoption form. (That is) enough.

கணேசன்: ஒண்ணு என்ன தம்பி, நூறு போடறேன். அவங்க ஒத்துக்கணுமே.

ஒன்று என்ன தம்பி, நூறு போடுகிறேன். அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டுமே. Why one, I can put hundred. (But) they should agree.

Red Cross woman: **திருச்செல்வன்**, **ஒங்களுக்குக் கல்யாணம் ஆயிடுச்சா**?

திருச்செல்வன், உங்களுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா? Thiruselvan, are you married?

திருச்செல்வன்: (shaking his head) **அக்கா கல்யாணம் ஆனவங்க**. **ஒரு கொழந்த இருக்கு**. **இன்னோரு கொழந்த பொறக்கப் போவுது**. **இவங்க** husband Madras-**ல** small scale industrialist-**ஆ இருக்காரு**. **எங்க** family **பத்திக் கணேசன்** vouch **பண்ணுவாரு**.

அக்கா கல்யாணம் ஆனவர்கள். ஒரு குழந்தை இருக்கிறது. இன்னொரு குழந்தை பிறக்கப் போகிறது. இவர்கள் husband Madras-இல் small scale industrialist-ஆக இருக்கிறார். எங்கள் family பற்றிக் கணேசன் vouch பண்ணுவார். Sister is married. There is a baby. Another baby is going to be born. Her husband is a small scale industrialist at Madras. Ganesan will vouch about our family.

Notice that while speaking with a third person திரு is referring to his sister using the respect-plural words such as ஆனவர்கள், இவர்கள். He did not talk this way at home while speaking directly to her. For example in the last scene, he said என்ன செய்யச் சொல்றே and not என்ன செய்யச் சொல்றீங்க.

Red Cross woman: **தத்து எடுத்துக்கப் போறது நீங்களா**, **ஒங்க** sister-**ஆ**?

தத்து எடுத்துக்கொள்ளப் போவது நீங்களா, உங்கள் sister-ஆ? Is it you or your sister who is going to adopt?

கமலி: **நா(ன்) இல்ல**, **இவந்தா(ன்)**. **சொல்ல வேண்டியதெல்லா(ம்) சொல்லியாச்சி**

நான் இல்லை. இவன்தான். சொல்ல வேண்டியது எல்லாம் சொல்லி ஆகி விட்டது. Not me. He is the one. All that should be told has been told.

திருச்செல்வன்: **என்ன** problem?

Red Cross woman: திருச்செல்வன், ஒங்க intentions ரொம்ப honorable-ஆதான் இருக்கு. ஆனா கல்யாணம் பண்ணாதவங்க, அதுவும் ஆண்களுக்கு policy-ஆ நாங்க தத்துக் குடுக்கிறதில்ல. Social welfare board அத ஏத்துக்காது. கல்யாணம் ஆனவங்களுக்குத்தான் தத்துக் குடுக்க முடியும். I am so sorry. எனக்கு இதத் தவிர வேற என்ன சொல்றதுன்னு தெரியல.

திருச்செல்வன், உங்கள் intentions ரொம்ப honorable-ஆகத் தான் இருக்கிறது. ஆனால் கல்யாணம் பண்ணாதவர்கள், அதுவும் ஆண்களுக்கு policy-ஆக நாங்கள் தத்துக் கொடுக்கிறது இல்லை. Social welfare board அதை ஏற்றுக் கொள்ளாது. கல்யாணம் ஆனவர்களுக்குத்தான் தத்துக் கொடுக்க முடியும். I am so sorry. எனக்கு இதைத் தவிர வேறு என்ன சொல்கிறது என்று தெரியவில்லை. Thiruchelvan, your intentions are honorable. But as a policy we do not give adoption to the unmarried, especially, men. Social welfare board would not accept it. We can only give adoption to those who are married. I am so sorry. I do not know what else to say other than this.

கணேசன்: அவங்களச் சொல்லிக் குத்தமில்லப்பா. அவங்களுக்குச் சட்டதிட்டங்கள்லாம் இருக்கே. (becomes inaudible)

குத்தம் - குற்றம், fault; சட்டம் - law; திட்டம் - plan, regulation.

அவர்களைச் சொல்லிக் குற்றம் இல்லை அப்பா. அவர்களுக்குச் சட்டதிட்டங்கள் எல்லாம் இருக்கே. No fault to say about them. There are laws and regulation to them.

7.13 Unusual proposal

Chapter 13:

திருச்செல்வன்: இந்திரா இருக்காங்களா? இந்திரா!

இந்திரா: என்ன கொணந்திருக்கீங்க, கல்லா, கயிறா, நான் தற்கொல செஞ்சிக்க?

கல் - rock; கயிறு - rope.

என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள், கல்லா, கயிறா, நான் தற்கொலை செய்து கொள்ள? What have you brought, rock or rope, for me to commit suicide.

திருச்செல்வன்: ஒனக்கு என்ன வயசாகுது?

வயது - age.

உனக்கு என்ன வயது ஆகிறது? How old are you?

இந்திரா: பாத்தா எப்பிடித் தெரியிதாம்?

பார்த்தால் எப்படித் தெரிகிறதாம்? How does it look when you see?

திருச்செல்வன்: பதினெட்டத் தாண்டிடிச்சில்ல?

தாண்டு - step over, cross.

பதினைட்டைத் தாண்டி விட்டது, இல்லை? It has crossed eighteen, hasn't it?

இந்திரா: தாண்டிடிச்சின்னா?

தாண்டி விட்டது என்றால்? If crossed?

திருச்செல்வன்: என்னக் கல்யாணங் கட்டிப்பியா? அமுதாவுக்கு அம்மாவா இருப்பியா? யோசிச்சிச் சொல்லு.

என்னைக் கல்யாணம் கட்டிக்கொள்வாயா? அமுதாவுக்கு அம்மாவாக இருப்பாயா? யோசித்துச் சொல். Would you marry me? Would you be mother to Amutha? Think and tell me.

[இந்திரா comes when திரு, கமலி and her son are together]

இந்திரா: கொஞ்சம் உள்ள போவீங்களா?

கொஞ்சம் - a little, an expression used to ask someone a favor; உள்ளே - inside.

Would you please go inside?

கமலி: என்ன நீ?

திருச்செல்வன்: அக்கா!

கமலி goes away, mumbling something to her son.

திருச்செல்வன்: அழறியா? ஏன் அழறே? இந்திரா!

அழுகிறாயா? ஏன் அழுகிறாய்? இந்திரா! Are you crying? Why are you crying? Indira!

இந்திரா: ஒரு வருஷமா நான் ஒங்களுக்காகக் காத்திட்டிருக்கேன், அந்தச் சின்னப் பொண்ணு வந்ததுக்கப்புறந்தான் நான் ஒங்க கண்ணுல பட்டேனா? நான் என்ன இலவச இணைப்பா?

வருஷம் - year; காத்து - waiting; சின்ன - சிறிய, little; கண்ணில் படு - fall in the eye, become visible; இலவசம் - free; இணைப்பு - annex.

ஒரு வருடமாக நான் உங்களுக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறேன். அந்தச் சின்னப் பெண் வந்ததற்கு அப்புறம்தான் நான் உங்கள் கண்ணில் பட்டேனா? நான் என்ன இலவச இணைப்பா? I have been waiting for a year. Did I fall in your eyes only after that little girl came along? Am I a free appendix?

திருச்செல்வன்: பிடிச்சிருக்குன்னு சொல்றதுக்கா அழற?

பிடித்திருக்கிறது என்று சொல்வதற்கா அழுகிறாய்? Are you crying just to say you like me?

இந்திரா: தொடாதீங்க! எனக்காக அமுதாவத் தத்து எடுத்துக்கப் போறீங்களா, இல்ல அமுதாவுக்காக என்னக் கல்யாணம் கட்டிக்கப் போறீங்களா?

தொடாதீர்கள்! எனக்காக அமுதாவைத் தத்து எடுத்துக் கொள்ளப் போகிறீர்களா, இல்லை அமுதாவுக்காக என்னைக் கல்யாணம் கட்டிக் கொள்ளப் போகிறீர்களா? Don’t touch me! Are you going to adopt Amudha for me; or, are you going to marry me for Amudha?

திருச்செல்வன்: எனக்கு இந்தக் கண்ணும் பிடிக்கும், அந்தக் கண்ணும் பிடிக்கும். இந்தக் கன்னமும் வேணும், அந்தக் கன்னமும் வேணும்.

கண் - eye; கன்னம் - cheek.

I like this eye; and I like that eye. I want this cheek; and I want that cheek.

இந்திரா: ஆ.. சரி, சரி. அதோட போதும். கல்யாணம்னா எனக்கு சில conditions உண்டு. அதுக்கு நீங்க …

அதோட - அத்துடன், with that; போதும் - enough.

Ah, ok, ok, enough of that. For marriage I have some conditions. For that you …

Chapter 8. Selections from classical arts

In this chapter we will read the lyrics of a few popular songs sung in Carnatic music concerts and Bharata Natyam dance programs. All songs selected have a common theme that is very popular in these arts. They are all about Krishna, a mythological figure said to be an incarnation of God. The songs view Krishna as a child and describe his playfulness, adorability and mischief. One praises Yasoda who has the good fortune to be Krishna's mother. Two others complain about his mischief. In the fourth one, the poet coddles and cherishes Krishna as a baby.

8.1 *என்ன தவம் செய்தனை*

This song is written by பாபநாசம் சிவன். It is associated with a certain ராகம் (melody) and a தாளம் (rhythm), which you would have to learn from your music teacher if interested. All I can tell you is that the name of the ராகம் is காபி and தாளம் is ஆதி. You can find audio clips of professional singing on the internet. Just type (or cut and paste) the song title into your favorite search engine. I am sure your favorite search engine can handle Unicode. In fact, for every selection presented in this chapter, you can find several renditions on the internet.

According to Hindu mythology Krishna is an incarnation of god born on earth as a child to a woman named Yasoda. The text is listed below and the discussion follows.

என்ன தவம் செய்தனை யசோதா
எங்கும் நிறை பரப்ரம்மம் அம்மா என்றழைக்க
என்ன தவம் செய்தனை

ஈரேழு புவனங்கள் படைத்தவனை
கையிலேந்தி சீராட்டிப் பாலூட்டித் தாலாட்ட
என்ன தவம் செய்தனை

சனகாதியர் தவ யோகம் செய்து
வருந்திச் சாதித்ததை புனித மாதே எளிதில் பெற
என்ன தவம் செய்தனை

பிரமனும் இந்திரனும் மனதில் பொறாமை கொள்ள
உரலில் கட்டி வாய்பொத்திக் கெஞ்சவைத்தாய் தாயே
என்ன தவம் செய்தனை

தவம் - an intense prolonged prayer, which differs from penance in that it is aimed at gaining boons from the gods rather than atoning for sin; செய்தனை - செய்தாய்; யசோதா - Yasoda; நிறை - fill; பர - all pervading; ப்ரம்மம் - the Sanskrit word Brahmam, meaning the fundamental basis of everything, God, not to be confused with the personified god Brahma; அம்மா - mom; அழை - call.

Yasoda, what தவம் did you perform for the all pervading Brahmam to call you mom?

ஈர் - two; ஏழு - seven; புவனம் - world; படை - create; ஏந்து - carry, hold; சீராட்டு - tend lovingly; பால் - milk; ஊட்டு - feed; தாலாட்டு - sing lullaby.

What தவம் did you perform to hold, the one who created fourteen worlds, in your hands, feed him, cherish him, and sing lullaby to him?

சனகா - a saint; ஆதி - first, beginning; ஆதியர் - முதலியோர் (section 4.10), and so on; யோகம் - yoga; வருந்து - suffer; சாதி - achieve; புனித - holy, blessed; மாது - woman; எளிது - easy; பெறு - receive.

What தவம் did you perform, oh blessed woman, to easily receive that which saints such as சனகா achieved by suffering through long and hard yoga?

பிரமன் - the personified god Brahma; இந்திரன் - the personified god Indiran; மனது - mind; பொறாமை - jealousy; உரல் - a device for grinding grains, like a mortar; கட்டு - tie; வாய் - mount; பொத்து - cover; கெஞ்சு - plead; கெஞ்ச வை - make someone plead; கண்ணன் - Krishna.

In such a way that Brahman and Indiran felt jealous in their minds, you tied Krishna to the grinding stone and made him cover his mount and plead. What தவம் did you perform?

When Krishna was mischievous, Yasoda like a good mother tied him up to restrict his movements. Thus Yasoda without her knowledge was in control of Brahmam and this made the knowing gods jealous.

In this song, the phrase என்ன தவம் செய்தனை is repeated after every passage. In musicology this phrase is called a பல்லவி and each passage is called a சரணம். Grammatically, the பல்லவி in this song is a main clause that can stand alone as it does in the first line. Every passage in the சரணம் is an auxiliary clause that completes a sentence. Tamil sentence structure makes it convenient to compose poems this way.

I once read somewhere that this song would be equally fitting if யசோதா were replaced with மரியா, which is the Tamil name for Mary. பிரமன், இந்திரன், and சனகா were also substituted by appropriate saints from the Bible, but I do not remember the details. This is just an interesting observation; my apologies if any religious sentiments are harmed on either side or even musicians' sentiments.

8.2 *தாயே யசோதே*

This song is composed by ஊத்துக்காடு வெங்கடசுப்பையர் in தோடி ராகம் and ஆதி தாளம். It is a series of complaints launched by women to Krishna's mother Yasoda about his mischief. You can find this song on the internet too. In this song, in addition to பல்லவி and சரணம், there is also an அனுபல்லவி which is a sub-பல்லவி.

We will break up the song into sections for discussion.

பல்லவி

தாயே யசோதே உந்தன் ஆயர்க் குலத்துதித்த
மாயன் கோபாலக்ருஷ்ணன் செய்யும் ஜாலத்தைக் கேளடி
(தாயே)

அனுபல்லவி

தையலே கேளடி உந்தன் பையனைப் போலவே – இந்த
வையகத்தில் ஒரு பிள்ளை ஐய்யய்ய நான் கண்டதில்லை
(தாயே)

தாய் - mother, madam; உந்தன் - உன்; ஆயர் - dairy farmers, those who herd cows; குலம் - class, community; உதி - arise; மாயம் - illusion, trick; மாயன் - trickster; கோ - cow; பால - boy child; கோபாலன் - cow boy, cowboy, a name often ascribed to Krishna due to his birth in ஆயர்குலம்; கோபாலகிருஷ்ணன் can be taken as the complete name for Krishna; ஜாலம் - trick, magic; கேள் - listen, அடி - hey you; கேளடி - listen girl.

தையல் - woman, lady; பையன் - boy, son; வையகம் - world; ஐய்யய்ய - tut tut, an expression of disapproval; காண் - see; கண்டது - the act of seeing, கண்டது இல்லை - never seen.

Let us first rearrange the words a little bit with some punctuation, to make it easier to read:

தாயே, யசோதே! உந்தன் ஆயர்க் குலத்து உதித்த மாயன் கோபால கிருஷ்ணன் செய்யும் ஜாலத்தைக் கேளடி.

தையலே, கேளடி! இந்த வையகத்தில் உந்தன் பையனைப் போலவே ஒரு பிள்ளை நான் கண்டதில்லை. ஐய்யய்ய!

Oh Yasoda ma'am, listen to the tricks done by the illusory Gopalarishnan arising in your shepherd class.

Listen lady, I have never seen a boy in this world like your son, tut tut!

Many lines of this poem end with அடி (section 4.13.2). In view of this அடி ending, the தாயே opening appears to be sarcastic.

சரணம்

காலினில் சிலம்பு கொஞ்சக் கைவளை குலுங்க - முத்து
மாலைகள் அசையத் தெரு வாசலில் வந்தான்
காலசைவும் கையசைவும் தாளமோடிசைந்து வர
நீலவண்ணக் கண்ணனவன் நடமாடினான்
பாலனென்று தாவியணைத்தேன் - அணைத்த என்னை
மாலையிட்டவன் போல் வாயில் முத்தமிட்டாண்டி
பாலனல்லடி உன் மகன் ஜாலமாகச் செய்வதெல்லாம்
நாலு பேர்கள் கேட்கச் சொல்ல நாணமிகவாகுதடி

(தாயே)

கால் - leg; சிலம்பு - a kind of anklet; கொஞ்சு - chime; கை - hand; வளை - bend, curve; கைவளை - bracelet; குலுங்கு - tumble; முத்து - pearl; மாலை - garland; அசை - move, dangle; தெரு - street; வாசல் - entrance; தெருவாசல் - the primary entrance of the house; அசைவு - movement; தாளம் - rhythm; இசை - agree, be in harmony; நீலம் - blue; வண்ணம் - color; கண்ணன் - Krishna; நடம் - dance; நடமாடு - dance, walk about; தாவு - leap; அணை - hug; மாலையிடு - put a garland, wed; மாலையிட்டவன் - one who wedded; வாய் - mouth; முத்தம் - *n.* kiss; முத்தமிடு - *v.* kiss; பாலனல்லடி - பாலன் அல்ல டி; எல்லாம் - all; நாலு - நான்கு, பேர் - person; நாணம் - shyness, being embarrassed; மிக - much; ஆகுது - ஆகிறது.

காலினில் சிலம்பு கொஞ்ச, கை வளை குலுங்க, முத்து மாலைகள் அசையத் தெரு வாசலில் வந்தான். கால் அசைவும் கை அசைவும் தாளமோடு இசைந்து வர, நீல வண்ணக் கண்ணன் அவன் நடமாடினான். பாலன் என்று தாவி அணைத்தேன்.

அணைத்த என்னை மாலை இட்டவன் போல் வாயில் முத்தம் இட்டான் அடி! பாலன் அல்ல அடி! உன் மகன் ஜாலமாகச் செய்வது எல்லாம் நாலு பேர் கேட்கச் சொல்ல நாணம் மிக ஆகுது அடி!

With anklets jingling on legs, bracelets tumbling on hands, pearl necklace dangling, he came at the front entrance. With leg and hand movements synchronized in a rhythm, the blue colored Krishna paraded. (Thinking) that (he is an adorable) boy, (I) leaped and hugged (him). As if (he is) the one who wedded (me), he kissed me, who hugged, on the mouth. Hey, your son is not a child. It makes (me) too embarrassed to say in public all the tricks your son does.

சுத்திச் சுத்தி என்னை வந்து - அத்தை வீட்டு வழி கேட்டான்
சித்தத்துக் கெட்டும் வரையில் சொல்லி நின்றேன்
அத்துடன் விட்டானோ பாரும் ஆத்தங்கரை வழி கேட்டான்
அத்தனையும் சொல்லிவிட்டு நின்றேன்
வித்தகமாய் ஒன்று கேட்டான் நாணமாகுதே!!
முத்தத்துக்கு வழிகேட்டு சத்தமிட்டாண்டி
அத்தனை இடம் கொடுத்து - மெத்தவும் வளர்த்து விட்டாய்!
இத்தனை அவனைச் சொல்லக் குத்தமில்லையேயடி!

(தாயே)

சுத்து - சுற்று, circle around; அத்தை - aunt; வீடு - house, home; வீட்டு is adjective of வீடு; வழி - way, route; வீட்டு வழி - way to the house; சித்தம் - mind; எட்டு - reach; வரை - until; அத்துடன் - அது உடன், with that; ஆறு - river; கரை - edge; ஆத்தங்கரை - riverbank, riverside; அத்தனை - each and every one, all; வித்தகம் - skill, deviousness; வித்தகமாய் - artly; சத்தம் - sound, noise; சத்தமிடு - make noise; அத்தனை - that many; இடம் - room; இடம் கொடு - give leeway; மெத்த - very much; வளர் - grow, rear (a child); குத்தம் - குற்றம், fault.

என்னைச் சுற்றிச் சுற்றி வந்து அத்தை வீட்டு வழி கேட்டான். சித்தத்துக்கு எட்டும் வரையில் சொல்லி நின்றேன். அத்துடன் விட்டானோ? பாரும்! ஆத்தங்கரை வழி கேட்டான். அத்தனையும் சொல்லிவிட்டு நின்றேன். வித்தகமாய் ஒன்று கேட்டான். நாணமாகுதே! முத்தத்துக்கு வழி கேட்டு சத்தம் இட்டான் அடி! இத்தனை அவனைச் சொல்லக் குற்றம் இல்லை. அத்தனை இடம் மெத்தவும் கொடுத்து வளர்த்து விட்டாய்!

He came circling around me and asked me the route to aunt's house. I stood and told him as well as my mind can. See if he left it at that; he asked the route to the riverside; I told him all. He asked one thing artfully. It is embarrassing! He asked

for a kiss with much alacrity. There is no fault to say about him; you have spoiled him so much.

முந்தாநாள் அந்தி நேரத்தில் சொந்தமுடன் கிட்டே வந்து
விந்தைகள் அனேகம் செய்து விளையாடினான்
பந்தளவாகினும் வெண்ணெய் தந்தால் விடுவேனென்று
முந்துகிலைத் தொட்டிழுத்துப் போராடினான்
அந்த வாஸுதேவன் இவன்தான் - அடி யசோதே
மைந்தனென்று தொட்டிழுத்து மடிமேல் வைத்து
சுந்தரமுகத்தைக் கண்டு சிந்தையுமயங்கு நேரம்
அந்தர வைகுந்தமோடு எல்லாம் காட்டினானடி

(தாயே)

முந்தாநாள் - the day before yesterday; அந்தி - evening; சொந்தம் - ownership; சொந்தமுடன் - with privilege; கிட்ட - near; விந்தை - skillful act, trick; அனேகம் - numerous; விளையாடு - play; பந்து - ball; அளவு - measure; உம் - at least; பந்தளவாகினும் - at least as much as a ball; வெண்ணெய் - வெண் நெய், white ghee, butter; துகில் - garment, sari; முந்துகில் - முன் துகில், front garment; போராடு - battle, struggle; வாஸுதேவன் is another name for Krishna; மைந்தன் - son; மடி - lap; சுந்தர - beautiful; முகம் - face; சிந்தை - mind; மயங்கு - be entranced; அந்தர - private; வைகுந்தம் - a place akin to paradise.

முந்தாநாள் அந்தி நேரத்தில் சொந்தமுடன் கிட்டே வந்து அனேக விந்தைகள் செய்து விளையாடினான். பந்து அளவாகினும் வெண்ணெய் தந்தால் விடுவேன் என்று முன் துகிலைத் தொட்டு இழுத்துப் போராடினான். அந்த வாசுதேவன் இவன்தான். அடியே யசோதே! மைந்தன் என்று தொட்டு இழுத்து மடி மேல் வைத்து, சுந்தர முகத்தைக் கண்டு சிந்தை மயங்கும் நேரம் அந்தர வைகுந்தம் எல்லாம் காட்டினான் அடி.

The day before yesterday at evening time, he came near (me) with privilege, showed many tricks and played. He touched and pulled my front garment (saying) that he would let me go (only) if (I) give a ball sized butter. He is that Vasudevan. Hey, Yasoda! When I touched, pulled, put him on my lap, and was entranced seeing the beautiful face, he showed me the heavens and all.

முந்துகில் is the part of the garment that runs across a woman’s breasts. According to a legend, Yasoda once suspected Krishna as putting dirt in his mouth as children normally do and scolded him. She asked him to open his mouth to check for dirt. When he opened his mouth however, she saw not only the dirt on her street, but the whole earth, the heavens and the universe as contained in him.

This of course made Yasoda faint. I think that the phrase அந்தர வைகுந்தமோடு எல்லாம் காட்டினான் is a reference to this legend. But there may be other interpretations.

8.3 *தீராத விளையாட்டுப் பிள்ளை*

Next we have a musical poem composed by a twentieth century poet called பாரதியார். This is also on Krishna. Artists sing this song in various melodies. I have also seen a Bharata Natyam rendition of it. You may find a clip on the internet.

தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை (தீராத)

தீர் - finish, exhaust; தீராத - incessant; விளையாட்டுப் பிள்ளை - playful boy; தெரு - street; பெண் - woman; ஓய் - stop, cease; ஓயாத - incessant; தொல்லை - trouble.

கண்ணன் தீராத விளையாட்டுப் பிள்ளை; தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை.

Kannan is always a playful child; unending trouble to women on the street.

தின்னப் பழம் கொண்டு தருவான் - பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்பன் என்னையன் என்றால் - அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான் (தீராத)

தின் - eat; பழம் - fruit; பாதி - half, middle; தட்டு - tap, hit; பறி - pick, snatch; அப்பன் - father, an endearing term for little boys; ஐயன் - sir; என் அப்பன் என் ஐயன் எனல் - pleading by saying ‘my darling, my sir’; எச்சில் - saliva; எச்சில் படுத்து - taint with saliva (by biting); கடி - bite; கொடு - give.

He would bring fruits to eat. In the middle of eating it, he would snatch it. If I plead with him, he would bite to taint it and give me.

எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான் is somewhat of a tongue twister. It becomes easier when you realize that the second vowel in each word as underlined alternate as இ-உ-இ-உ and you move your lips accordingly.

தேனொத்த பண்டங்கள் கொண்டு - என்ன
செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான்
மானொத்த பெண்ணடி என்பான் - சற்று
மனமகிழும் நேரத்தி லேகிள்ளி விடுவான் (தீராத)

தேன் - honey; ஒத்த - like; தேனொத்த- honey-like, tasty; பண்டம் - stuff, snack; என்ன செய்தாலும் - whatever (you) do; எட்டாத - unreachable; உயரம் - height; மான் - deer; பெண் - woman; மானொத்த பெண்ணடி என்பான் - (he would sweet-talk me by) saying (that I am) a girl (as beautiful) as a deer; சற்று - a little; மனம் - mind; மகிழ் - feel happy; நேரம் - time; கிள்ளு - pinch.

He would bring tasty snacks and place (them) at heights not reachable (no matter) whatever I do. He would talk sweetly to me; just when I am pleased he would pinch me.

அழகுள்ள மலர் கொண்டு வந்தே - என்னை
அழ அழச் செய்துபின் கண்ணை மூடிக் கொள்
குழலிலே சூட்டுவேன் என்பான் - என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான் (தீராத)

அழகு - beauty; மலர் - flower; அழு - cry, weep; மூடு - close; குழல் - hair, braid; சூட்டு - *v.* crown; குருடு - blind; தோழி - friend.

Bringing beautiful flowers, making me cry and cry, (he) would then say ‘close eyes; will decorate (on) your hair’. Making me blind, he would put the flower to friend.

பின்னலைப் பின்னின் றிழுப்பான் - தலை
பின்னே திரும்புமுன் னேசென்று மறைவான்
வன்னப் புதுச் சேலை தனிலே - புழுதி
வாரிச் சொறிந்தே வருத்திக் குலைப்பான் (தீராத)

பின்னல் - braid; பின் - behind; நில் - stand; நின்று - standing; இழு - pull; தலை - head; திரும்பு - turn, turn around; செல் - go; மறை - hide, disappear; வன்னம் - beauty, elegance; வன்ன - beautiful, shiny; புது - new; சேலை - sari; சேலைதனிலே - சேலையிலே; புழுதி - dirt, dust; வார் - scoop; சொறி - pour, throw; வருந்து - suffer; வருத்து - make suffer; குலை - shuffle, dishevel.

பின் நின்று பின்னலை இழுப்பான். தலை பின்னே திரும்பும் முன்னே சென்று மறைவான். வன்னப் புதுச் சேலைதனிலே புழுதி வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான்.

Standing behind (me), he would pull (my) braid; would go and disappear before the head turns around. Making me suffer, he would shuffle my beautiful new sari and throw dust.

புல்லாங்குழல் கொண்டு வருவான் - அமுது
பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்
கள்ளால் மயங்குவது போலே - அதனைக்
கண்மூடி வாய்திறந் தேகேட் டிருப்போம் (தீராத)

அங்காந் திருக்கும்வாய் தனிலே - கண்ணன்
ஆறேழு கட்டெறும் பைப்போட்டு விடுவான்;
எங்காகிலும் பார்த்த துண்டோ? - கண்ணன்
எங்களைச் செய்கின்ற வேடிக்கை யொன்றோ? (தீராத)

புல் - grass; குழல் - tube; புல்லாங்குழல் - reed instrument, flute; அமுது - ambrosia, sweetness; பொங்கு - well up; ததும்பு - *v.* brim, be full enough to overflow; நல் - good; கீதம் - song; படி - read, sing, play (music); கள் - toddy, an alcoholic drink; மயங்கு - be intoxicated.

அங்காந்து - (mouth) open and upward; அங்காந்து குடித்தல் is drinking without the container touching the lips; வாய் - mouth; ஆறு - six; ஏழு - seven; எறும்பு - ant; கட்டெறும்பு - a large black ant; எங்கு ஆகிலும் - anywhere; உண்டு - exists, true; பார்த்தது உண்டு - have seen; வேடிக்கை - trick, prank, fun; ஒன்றோ - is it one, it is numerous.

He would bring a flute and play songs ebbing with sweetness. We would be listening to it with closed eyes and open months, as if intoxicated.

In our open months Kannan would put six or seven hard-ants. Have (you) seen (such acts) anywhere? The tricks Kannan does on us are numerous.

விளையாட வாவென் றழைப்பான் - வீட்டில்
வேலையென் றாலதைக் கேளா திழுப்பான்
இளையாரொ டாடிக் குதிப்பான் - எம்மை

இடையிற் பிரிந்துபோய் வீட்டிலே சொல்வான் (தீராத)

அம்மைக்கு நல்லவன் கண்டீர் - மூளி
அத்தைக்கு நல்லவன் தந்தைக்கு மஃதே
எம்மைத் துயர்செய்யும் பெரியோர் வீட்டில்
யாவர்க்கும் நல்லவன் போலே நடப்பான் (தீராத)

கோளுக்கு மிகவும் சமர்த்தன் - பொய்ம்மை
சூத்திரம் பழிசொலக் கூசாச் சழக்கன்
ஆளுக் கிசைந்தபடி பேசித் தெருவில்
அத்தனை பெண்களையும் ஆகா தடிப்பான் (தீராத)

The first of these three stanzas is full of coupling transformations. So I will separate the words for you.

விளையாட வா என்று அழைப்பான். வீட்டில் வேலை என்றால் அதைக் கேளாது இழுப்பான். இளையாரொடு ஆடிக் குதிப்பான். இடையில் எம்மைப் பிரிந்து போய் வீட்டிலே சொல்வான்.

விளையாடு - play; அழை - call, invite; வீடு - house, home; வேலை - work; கேள் - hear, listen; இழு - pull; இளையார் - youngsters; இளையாரொடு - இளையார் ஒடு, இளையார் உடன், with youngsters; ஆடு - dance; குதி - jump; எம்மை - us; இடை - middle; பிரி - separate.

அம்மை - அம்மா, mother; மூளி - blunt, defective, imperfect; அத்தை - aunt; தந்தை - father; அஃதே - அதுவே, the same; துயர் - suffer, trouble; துயர் செய் - make suffer; பெரியோர் - elders; பெரியோர் யாவர் - any and all elders; நல்லவன் - good (boy); நட - walk, act.

கோள் - squeal; சமர்த்தன் - smart one, skilled one; பொய்ம்மை - falsehood, lie; சூத்திரம் - strategy, cunningness; பழி - blame; கூசு - be shy, hesitate; சழக்கன் - rogue, lawless; ஆள் - person, individual; இசை - agree, suit; பேசு - talk; ஆகாது - disagreeable; ஆகாது அடி - make disagreeable.

He would call me to play; if I say there is work at home, without listening to it, he would pull me. He would play and jump with youngsters. Separating from me in the middle, he would go and tell at my home.

You see, he is a good boy to my mother; good boy to my wretched aunt; same to my father. At my home full of elders who trouble me, he would act as a good boy to everyone.

He is skillful at squealing; an unruly one who never hesitates to lie, scheme, or blame. Speaking suitably to everyone, he would make every woman on the street disagreeable.

8.4 *சின்னஞ்சிறு கிளியே*

This poem is also by பாரதியார். This one is only vaguely related to Krishna; the poet sees Krishna as a little girl. The lyrics would fit any child. If you can sing it musically it would make an excellent lullaby.

சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா செல்வக் களஞ்சியமே
என்னைக் கலி தீர்த்தே உலகில் ஏற்றம் புரிய வந்தாய்

சிறு - little; சின்ன - little; சின்னஞ்சிறு - cute little; கிளி - parrot; கண்ணம்மா - கண்ணன் converted to a girl's name; அம்மா and கண்ணம்மா are also terms of endearment to a girl. செல்வம் - wealth; களஞ்சியம் - treasury; கலி - trouble, evil; தீர் - exhaust, annul; உலகு - world; ஏற்றம் - ascent, promotion; ஏற்றம் புரி - promote, liberate (from sin).

Oh, Kannamma, cute little parrot, my treasure trove! You have come to annul all my sufferings and to elevate me.

பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா பேசும் பொற்சித்திரமே
அள்ளி அணைத்திடவே என் முன்னே ஆடி வரும் தேனே

பிள்ளை - child; கனி - fruit; அமுது - nectar, ambrosia; கனியமுது - sweet cocktail made of fruits and ambrosia; பேசு - speak; பொன் - gold; சித்திரம் - picture, art; அள்ளு - scoop; அணை - hug; தேன் - honey.

Oh, child as sweet as ambrosia, talking golden artwork, honey swaying in front of me to scoop and hug!

ஓடி வருகையிலே கண்ணம்மா உள்ளம் குளிருதடி
ஆடித் திரிதல் கண்டால் உன்னைப்போய் ஆவி தழுவுதடி

ஓடு - run; வருகை - coming; உள்ளம் - mind, heart; குளிர் - cool, soothe; குளிருது - குளிர்கிறது, soothes; in cultures evolved in cold climates the expression 'it warms my heart' means that it is soothing; however, in tropical climates, the term உள்ளம் குளிர்கிறது means that it is soothing; திரி - roam; ஆவி - vapor, soul; தழுவு - hug.

While you come running, my mind soothes. If (when) I see you dance around, my soul goes and embraces you.

உச்சிதனை முகர்ந்தால் கருவம் ஓங்கி வளருதடி
மெச்சியுனை ஊரார் புகழ்ந்தால் மேனி சிலிர்க்குதடி

உச்சி - apex, the top of the head; முகர் - sniff; கருவம் - கர்வம், pride; ஓங்கு - lift; ஓங்கி - loftily; வளர் - grow; ஓங்கி வளர் - grow tall, flourish; மெச்சு - admire; ஊர் - village, town, or city; ஊரார் - people in town, neighbors; புகழ் - praise; மேனி - body; சிலிர் - get goose bump.

If I sniff the top of your head, my pride grows tall. If people admire you and praise you, I get goose bumps.

கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளந்தான் கள்வெறி
கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா உன்மத்தமாகுதடி

கன்னம் - cheek; முத்தம் - *n.* kiss; முத்தமிடு - முத்தம் இடு, *v.* kiss; கள் - toddy, an alcoholic drink; வெறி - intoxication; உன்மத்தம் - frenzy.

If I kiss you on the cheek, my mind is intoxicated; if I hug you, Kannamma, it is frenzied.

சற்றுன் முகம் சிவந்தால் மனது சஞ்சலமாகுதடி
நெற்றி சுருங்கக் கண்டால் எனக்கு நெஞ்சம் பதைக்குதடி

சற்று - a little; சிவப்பு - red; சிவ - redden, sadden; மனது - மனம், mind; சஞ்சலம் - agitation; நெற்றி - forehead; சுருங்கு - shrink; நெஞ்சம் - நெஞ்சு, mind, heart; பதை - agonize.

If your face saddens a little, my mind is agitated. If I see your forehead wrinkled, my heart agonizes.

உன் கண்ணில் நீர் வடிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி
என் கண்ணிற் பாவையன்றோ கண்ணம்மா என்னுயிர்
நின்னதன்றோ

வடி - drain, drip; உதிரம் - blood; கொட்டு - pour; பாவை - pupil; உயிர் - life, soul; உன்னது - உன்னுடையது, yours.

If tears drip from your eyes, my heart bleeds. Aren't you the pupils in my eyes, Kannamma! Isn't my life yours?

சொல்லு மழலையிலே கண்ணம்மா துன்பங்கள் தீர்த்திடுவாய்
முல்லைச் சிரிப்பாலே எனது மூர்க்கம் தவிர்த்திடுவாய்

மழலை - child's lisp; துன்பம் - misery, suffering; முல்லை - jasmine; சிரிப்பு - laughter; மூர்க்கம் - anger; தவிர் - avoid, prevent.

With the sweet babble you speak, Kannamma, you annul my sufferings; with your jasmine laughter, you remove my anger.

இன்பக் கதைகளெல்லம் உன்னைப்போல் ஏடுகள்
சொல்வதுண்டோ
அன்பு தருவதிலே உன்னை நேர் ஆகுமோர் தெய்வம் உண்டோ

இன்பம் - pleasure; கதை - story; ஏடு - book; அன்பு - love, affection; நேர் - straight, equal; தெய்வம் - god.

Would books say the pleasant stories like you? Would a god equal you in granting love?

